Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.73/2020

Dated 30-01-2026
Deposition of witness for : PW 30

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாலமுருகன் | வயது | : | 35 |
| தந்தை பெயர் | : | குருமூர்த்தி | தாலுக்கா | : | சீர்காழி |
| கிராமம் | : | சீர்காழி | தொழில் | : | உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Other Accused present/A3, 8 absent 355 BNSS Petition filed and allowed.**

Ld. D. **Counsel Present**

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் தற்போது திருவாரூர் மாவட்ட சைபர் கிரைம் குற்றப்பிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன்.

2) கடந்த 12.6.2019 ம் தேதி நடுகாவேரி காவல்நிலையத்தில் பணியில் இருந்தபோது தென்பெரம்பூர் கிராம நிர்வாக அலுவலர் சண்முகவேலன் என்பவர் நிலையம் ஆஜராகி

பணவெளி கீழமாரியம்மன்கோவில் தெரு எதிரே உள்ள வெட்டாறு தென் கரையில் 22 வயது மதிக்க தக்க ஆண் சடலம் ஒன்று கிடப்பதாக கொடுத்த புகாரை பெற்று நிலைய கு.எண்.90/2019 பிரிவு 302 இ.த.ச. படி வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் அறிக்கை மற்றும் புகாரை திருவையாறு நீதித்துறை நடுவர் அவர்களுக்கும் நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.18 ஆகும்.

3) இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

அனைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1) நான் சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை.

2) பொதுவாக அடையாளம் தெரியாத பிணம் கிடக்கிறது என்று புகார் வந்தால் சந்தேக மரணம் என்றுதான் பதிவு செய்யவேண்டும் என்றால் கொலை நடந்திருப்பதற்கான முகாந்திரம் இருப்பதாக புகாரில் கண்டுள்ள செய்திகள் மூலம் தெரியவந்தால் நேரடியாக கொலை வழக்கு பதிவு செய்யலாம்.

3) நான் இந்த வழக்கில் புலன் விசாரணை அதிகாரி கிடையாது.

4) இறந்த நபரின் வயதை 22 என்று எவ்வாறு முதல் தகவ்ல அறிக்கையில் குறிப்பிட்டு இருக்கிறிர்கள் என்றால் கிராம நிர்வாக அதிகாரி கொடுத்த புகாரின் அடிப்படையில் பதிவு செய்தேன். புகாரை வாதி காவல்நிலையத்தில் வந்துதான் என்னிடம் கொடுத்தார் என்றால் சரிதான்.

5) புகாரை பதிவு செய்வதற்கு முன்பாக பிரேதம் கிடந்த இடத்தில் பிரேதத்தை பாதுகாப்பதற்கு நான் எந்த ஏற்பாடும் செய்யவில்லை. நானும் போய் பார்க்கவில்லை. புகார் வாதி ஏற்பாடு செய்திருந்தாரா என்று நான் கேட்கவில்லை. புகாரை பதிவு செய்து விசாரணைடக்காக ஆய்வாளரிடம் கொடுத்தேன்.

6) புகாரில் கண்டுள்ள நபர் யார், அவர் மீது வேறு வழக்குகள் ஏதாவது நிலுவையில் இருந்ததா என்பது எனக்கு தெரியாது.

7) நான் நேரடியாக 302 இ.த.ச வழக்கு போட்டது தவறு என்றும் கு.வி.மு.ச. 174 சந்தேக மரணம் என்றுதான் வழக்கு பதிவு செய்திருக்கவேண்டும் என்று சொன்னால் தவறு.

8) கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை

இல்லை.

/உண்மை நகல்/

ஒம்/-P.வேல்முருகன்
முதன்மை மாவட்ட நீதிபதி
தஞ்சாவூர்